Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 18 (01.5.94) ஞாயிற்றுக்கிழமை ஓசை 72

## மேதினப் பேரணி செல்லும் பாதை போக்குவரத்துக்கு தவிர்ப்பு

மேதினப் பேரணி நகர்வதற்காக பிரதான வீதியாகிய காங்கேசன்துறை வீதியில், சுண்ணாகச் சந்தியில் இருந்து நாச்சிமார்கோயிலடிவரை பி. ப. 1.00மணிக்குப் பின்னர் ஊர்வலப் பேரணி செல்வதைத் தவிர, ஏனைய போக்குவரத்துக்காகப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டுள்ளது. குறிப்பாக 1.00 மணிக்குப் பின்னர் மேதின ஊர்திகளும் அவ்வீதிவழியால் ஆரம்பிக்கும் இடத்திற்கு வருவதும் தவிர்க்கப்பட்டுள்ளது. இதேவேளை மே நாள் நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பொதுமக்களது நலன்கருதி மருந்தகங்களையும், மிதிவண்டி திருத்தகங்களையும், ரயர் கடைகளையும் திறந்து வைத்திருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# ...ஆளும் ஐ. தே. கட்சிக்குள் பெரும் நெருக்கடி; ...செயலாளர் கூரே இன்று பதவி துறப்பார்

## ...உடன் பதவி விலக ஜனாதிபதி நிர்ப்பந்தம்

(கொழும்பு)

...க்கிய தேசியக் கட்சிப் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து அமைச்சர் சிறிசேன ... இன்று இராஜினாமாச் செய்யவுள்ளார் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் ...பின் பேரிலேயே சிறிசேன கூரே பதவி விலகவுள்ளார் காமினி திசநாயக்கா விவ...தில் ஜனாதிபதி டி பி விஜேதுங்காவுடன் ஏற்பட்ட முரண்பாடே இப் பதவி ...வுக்கு காரணமாகும்

...றித்து செய்தி நிறு...ன்றிற்கு அளித்த ... அமைச்சர் சிறி...ரே குறிப்பிடுகையில், ... பொதுச் செயலா...யில் இருந்து விலகுமாறு தன்னை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து தாம் பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாகவும், இதனைத் தொடர்ந்து யார் இப் பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்கள் என்பது குறித்து மேலதிக தகவல் எதையும் அவர் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்

மேற்படி முடிவைத் தொ...ர்ந்து அவர் ஐ. தே. க. அமைச்சராகவோ அக்கட்சி உறுப்பினராகவோ இருப்பாரா என்பது தொடர்பாக கருத்து எதனையும் தெரிவிக்க மறுத்து விட்டதாக அந் நிறுவனம் தெரிவித்தது.

அமைச்சர் சிறிசேன கூரே நாளை மறுதினம் நடைபெறவுள்ள பொதுச் சபைக் கூட்

(6ஆம்பக்கம் பார்க்க)

## அரசாங்கத்திற்கு பாடம் புகட்டவே குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டன

### மதிவண்ணன் வாக்குமூலத்தில் தெரிவிப்பு

(கொழும்பு)

''அரசாங்கத்திற்கு பாடம் புகட்ட குண்டுகளை வெடிக்கச் செய்யுமாறு தனக்குபணிப்புரை வழங்கப்பட்டதாக அந்தோனி அருள்தாஸ் எனக்கு தெரிவித்தார்'' இவ்வாறு கொழும்பு ஹோட்டல் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அருள்தாசின் நண்பரும் குண்டுவெடிப்பில் காயமடைந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் மதிவண்ணன் கூறியிருப்பதாக பொலிசார் கூறுகின்றனர்.

மதிவண்ணன் தனது வாக்குமூலத்தில் மேலும் கூறுகையில்:

ஏப்ரல் எட்டாம்திகதியன்று வேலைவிட்டு வீடு திரும்பிய போது அருள்தாசை சந்தித்ததாகவும், அவருடன் இரத்மலான சிறிமல் உயன வீதியிலுள்ள விடுதி அருள்தாசின் இருப்பிடத்திற்கு சென்றதாகவும், அருள்தாஸ் தனது அறையிலிருந்து சிறிய தோற்பைஒன்றை எடுத்துக்கொண்டு பியர்குடிப்பதற்கு அழைத்துச் சென்றதாகவும், கல்கிசை நோக்கி சென்று கொண்டிருந்தபோது வழியில் தோற்பையிலிருந்து பொருள் ஒன்றையும், காற்சட்டைப் பையிலிருந்து பற்றரி ஒன்றையும் மற்றும்கருவிகளையும் எடுத்து பொருத்தியதாகவும் என்ன செய்கிறீர்? என அருள்தாசை வினவிய போது அரசாங்கத்திற்கு பாடம் புகட்ட குண்டுகளை வெடிக்கச் செய்ய தன

(6 - ம் பக்கம் பார்க்க)

## ...பி. ஜெனரல் லக்கி அல்கம, கூரே ...டி. பியை கவிழ்க்க கூட்டுச்சதி

(கொழும்பு)

...தேசியக் கட்சியின் ...செயலாளர்சிறிசேன ...லப் ஜெனரல் ...ல்கமவு... ஜனாதிப... ...ாவை பதவிகவில... ...த்திட்டமொன்றை ...தாக வாராந்த ...யொன்று நேற்று ... அனுப்பிய இரகசிய செய்தி மூலம் தெரிவித்துள்ளதாக அப்பத்திரிகைச்செய்திமேலும் தெரிவித்துள்ளது. ...க் செய்தியை கேள்விப்... ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா சிறிசேன கூரேயை உடனடியாகத் தம்மைச் சந்திக்குமாறு அழைப்பு விடுத்துள்ளதாகவும், அப்பத்திரிகை மேலும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

## பிரேமா நினைவுச்சின்னம் கூரேயால் திறந்து வைப்பு

## மேதினத்தை யாழ். குடாநாடு எங்கும் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மேதினத்தை ஒட்டி இன்று ... இந்த எழுச்சிப் பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் ... றலைத் தொடர்ந்து வாத்திய அணி, விடுதலைப் புலிகள் ... மார்கள் அணி ஆகியவை அணிவகுத்து முன்னே செல்ல-

யொன்று நேற்று
செய்தி வெளியிட்

த்தி டம் முழுமை
லயில் இருந்ததாக
பொலிஸ் அதிகாரி
ஜனாதிபதிக்கு

## கூரேயால் திறந்து வைப்பு

(கொழும்பு)

கொழும்பு ஆமர்வீதிச் சந்தியில் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தை அமைச்சர் சிறிசேன கூரே நேற்று திறந்து வைத்தார். பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதச்சடங்குகளைத் தொடர்ந்து இந்த நினைவுச் சின்னம் திறந்து வைக்ப்பட்டது. அமைச்சர் சிறிசேன கூரே நினைவுச் சின்னத்தை திறந்துவைத்த இவ் வைபவத்தில் கொழும்பு மாநகர பிரதி மேயர் கே. கணேசலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் ஹட்சன் சமரசிங்க, அமைச்சர் வீரசிங்க மல்லிமாராய்ச்சி உட்பட மற்றும் டல மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை கொழும்பு புதுக்கடைப் பகுதியில் அமைக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## க்கு ரணில் வழங்கிய
## தரவை கைவிட்டார்

தேசியக் கட்சியின்
செயலாளரும் அமை
சிறிசேன கூரேக்கு
ல் கட்சியில் செல்
டையவர்கள் ஆத
கிய போதும், தற்
வர் தனிமைப்படுத்
ஒருவராக இருப்ப
ான்றே தெரிவதாக
வருக்கு வெளிப்படை

யாக ஆதரவு வழங்கி வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தற்போது அவ் ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதற்குக் காரணம் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் தலையீடே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சித்தலைமை விரும்பினால் மீண்டும்
## சயலாளர் பதவி ஏற்கத் தயார்
### — சிறிசேன கூரே

(கொழும்பு)

ாள் ஜனாதிபதி ஆர்.
ாசா மறைந்த ஒரா
வபவத்தின் போது
கட்சிப்பதவியை இரா
செய்யப்போவதாக
தேசியக்கட்சி பொதுச்
ளரும். அமைச்சரு
றிசேன கூரே லண்
பி, ஸி சிங்கள சே
தேசியவுக்கு அளித்த
ல் தெரிவித்தார்.
ர்ந்து அவர் தெரி
, தனது பதவி வில
டர்பாக கட்சிக்கு
ஏற்படும் என கட்சி
லைமைப்பீடம் நினை
ால், அதற்கு தான்
ணங்கி மீண்டும்
ார் பதவியை ஏற்கத்
இருப்பதாகவும்
தார்.
ன பல ஆயிரக்கணக்
ஆதரவாளர், பொது

மக்கள் சந்தித்து இப்பதவியில் இருந்து என்னை விலக வேண்டாம் என வற்புறுத்தி வருகிறார்கள் என்னால் இப் பதவியில் தொடர்ந்து இருக்க முடியும் என்னை எவராலும் பதவியில் இருந்து வெளியேற்ற முடியாது ஆனால் நான் அப்படிச்செய்ய மாட்டேன் ஏனெனில் வேறுகட்சிகளைப் போன்று எமது கட்சி பிளவுகள் ஏற்படுத்தி கட்சி ஆதரவாளர்களை குழப்பமடைய செய்ய நான் விரும்பவில்லை.

எமது கட்சிக்குள் என்ன

(6 - ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை எதிர்ப்போர்
## இன்னும் பலம் பெறவில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை எதிர்ப்போர் அவருடன் மோதும் அளவுக்கு இன்னும் பலம் பெறவில்லை என்பதையே சிறிசேன கூரேயின் பதவி விலகல் எடுத்துக் காட்டுவதாக பி. பி. ஸியின் கொழும்பு முகவர் எடுத்துக் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கூரே தொடர்ந்தும் அமைச்சரவையிலும், தீவிர அரசியலிலும் ஈடுபாடு உடையவராகவே இருப்பார் எனவும் தெரிவித்துள்ளார்.

மேதினத்தை ஒட்டி இன்று மாபெரும் எழுச்சிப் பேரணியும் பொதுக்கூட்டமும் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று பிற்பகல் 2.00மணியளவில் மருதனார்மடம் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் எழுச்சிப் பேரணி யாழ். பல்கலைக்கழகம் வரை செல்லும். இதன் பின்னர் அங்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

இலட்சக்கணக்கான பொது மக்கள் கலந்து கொ வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மருதனார்மடத்திலிருந்து இப்பேரணி தாவடி, குளப்பிட்டி, கொக்குவில் சந்தி, நாச்சிமார் கோவிலடி ஊடாக இராமநாதன் வீதி கலட்டி சந்தியூடாக யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தை வந்தடையவுள்ளது.

தமிழீழ தேசியக் கொடி ஏற்

## அடிப்படை உரிமைகளை
## வெல்லவும் போராடுவோம்
### - கல்விப்பணிப்பாளரின் மேதினச் செய்தி

தொழிலாளர் வரிசையில் கல்வியாளரும் உள்ளனர் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுத்த நந்நாளை நினைவு கூரும் அதேவேளை அடிப்படை உரிமைகளுக்காகப் போராட வேண்டிய நிலையில்நாம் இருக்கின்றோம்

யாழ் வலயம் - 1 இன் கல்விப்பணிப்பாளர் செல்வி பெரியதம்பி விடுத்துள்ள மேதினம் சம்பந்தமான செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அச் செய்திக் குறிப்பில் ஒவ்வாரு மக்களும் தமது உரிமைகளுக்காக குரல் கொடுக்க உரித்துடையவர்கள் ஒற்றுமை

(6 - ம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவு உரையை ஒத்த
## டி. பி. யின் மேதின செய்தி

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா நாட்டு மக்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக நேற்றிரவு ஆற்றிய உரையில் அரசு மற்றும் தனியார்துறை ஊழியர்களின் ஆகக் குறைந்த அடிப்படை ஊதியம் 2000 ரூபாவாக உயர்த்தப்படுமென்றும், மே முதலாம் திகதிக்கு முன்பு 180 நாட்கள் அரசுப் பணிகளில் தற்காலிகமாக கடமையாற்றியோருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும், தொழிலாளர் சேமலாபத்திட்டத்தில் சேர்ந்திருப்போருக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது அத்துடன் 8000 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு, அநேக மாணவருக்கு இலவச மதிய உணவு என்பவை வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உரை வழமையான மேதினப்பிரகடனமாக இல்லாமல் ஒரு குட்டி வரவு-செலவுத் திட்டம் போலவும் தேர்தல்களில் வாக்காளர்களை கவரும் ஒரு சலுகையாகவும் இருப்பதாக பி பி ஸி கருத்து வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது

போராளிகள், விடுதலைப் புலிகள் மகளிர் அணி, கடற் புலிகள் அணி, தமிழீழ காவல் துறை, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, மதகுரு ஊர்திகளும் இணைந்து மாபெரும் பேரணி எழுச்சியுடன் தொடர்ந்து செல்லும்

(6 - ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில்
## மேதினப் பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்றுப் பிற்பகல் முதல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேதினத்தை முன்னிட்டு மக்கள் பலர் கொழும்பில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும், சுமார் ஐயாயிரத்திற்கும் அதிகமான பொலிசார் பணியில் ஈடுபடுத்தப்படுவதுடன் கேந்திர நிலையங்களில் படையினர் அமர்த்தப்படுவர் என்றும், படையினரின் விசேட ரோந்துகளும் இடம் பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

## இரு போராளிகள் வீரச்சாவு

வன்னிமாவட்டம் பூவரசங் குளத்திற்கு அருகிலுள்ள இராமயங்கல் மில்லடி என்னும் இடத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடித் திடீர் மோதலில் விடுதலைப்புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த மேஜர் பாலையா (தாசன் மில்ரன் பனங்கட்டிக் கொட்டு, மன்னார்) கப்டன் மில்ரன் - சர்வானந்தன் (சுப்பிரமணியம் உதயகுமார், ஜெயபுரம், முழங்காவில் மன்னார்.) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



மேஜர் பாலையா



கப்டன் மில்ரன்

## வரி விளம்பரம்

**உடன் தேவை**

TV, மணிக்கூடு திருத்துனர், லிகிதர் (பெண்) உடன் தேவை தொடர்பு;- வீடியோ எஞ்சினியர், பிரதான வீதி நெல்லியடி, கரவெட்டி
(8159)

**ஆங்கிலம்**

ஆண்டு 11, 10-க்குரிய ஆங்கில வகுப்புகளும் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களுக்குரிய விசேட ஆங்கில வகுப்புகளும் ஆரம்பமாகியுள்ளன சம்றொக் யாழ் சுண்டுக்குளி.
[8147]

**சக்தி இயற்கைப்பசளை**

வதிவிட வேளாண்மைக்கு ஒரு வரப்பிரசாதம் சக்தி இயற்கைப்பசளை. விதிமுறைப்படி தயாரான கூட்டெரு சக்தி இயற்கைப்பசளை - விளைச்சலைப் பெருக்க சக்தி இயற்கைப்பசளை பரீட்சார்த்த பக்கற் விலை ருபா 6/- 5 கிலோ பக்கெற் ரூபா 50/- மொத்த கொள்வனவிற்கு விசேட கழிவு ' மில்க்வைற்''
[சி 9288]

**BECON**
**யாழ்ப்பாணம்**

**O/L**
**DAY CLASS**

**ஆரம்பம்:**
2.5.9
8 00 am

எமது வழமையான
ஆசிரியர் குழு

இரா. செல்வவடிவேல்
கே.எஸ். முத்துலிங்கம்
T.T.Sமோகன் - Sவாமன்
திரு, தெய்வதவபாலன்
திரு. வேல்நம்பி
(சி-9312)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

**முழுநேரப்**
**பட்டப்பின்**
**கல்வித் தகைமை**
**கற்கை நெறி 1993 / 94**
**புதிய அனுமதி**

தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் நிரந்தர பட்டதாரி ஆசிரியர்கள் இடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1994-05-27 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப்ப டிவங்களைப் பெறவிரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக் கிளையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1994 - 07 - 24 அன்று பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1994-05-27ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

**பதிவாளர்,**
யாழ். பல்கலைக்கழகம்.
(சி-9292)

**வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர்**
**சங்கத்தினால் நடாத்தப்படும்**
**பெண்களுக்கான**
**தையல், தட்டச்சு பயிற்சிக்கான**
**விண்ணப்பம் கோருதல்**

மேற்படி பயிற்சியினை பெறவிரும்பும் மாணவிகள் சங்கப் பணிமனையில் விண்ணப்பப் படிவங்களை பெற்று 14 05-94க்கு முன் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செல்லையா உருத்திரா
இல.71 காங்கேசன்துறை வீதி, தலைவர்
கொக்குவில். (சி-9315)

**வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்**
**அறிவித்தல்**
**அனைத்துலக தொழிலாளர் தினம்**
**மே 1**

சுருட்டுத் தொழிலாளர்கள் அனைவரையும் மே தினத்தை முன்னிட்டு 01-05-94 இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு சங்கப் பணிமனையில் கூடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். எமது உரிமைகளை வென்றெடுக்கவும், எமது எழுச்சியை உலகிற்கு எடுத்துக் காட்டவும் அனைத்து சுருட்டுத் தொழிலாளர்களையும் மே தினப் பேரணியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

''நன்றி''

செல்லையா உருத்திரா
இல 71, காங்கேசன்துறை வீதி, தலைவர்
கொக்குவில். (சி-9316)

**"பேரினவாத ஸ்ரீலங்கா**
**அரசின் அடக்கு முறைகளை**
**உடைத்தெறிய மேதினப்**
**பேரணியில் அணிதிரள்வோம்"**

மே முதல் நாள் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகும் மேதினப் பேரணியிலும், யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறுகின்ற பொதுக்கூட்டத்திலும் தீவக கோட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு உட்பட்ட வேலணை ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு-நயினாதீவு ப நோ கூ சங்கம், ஊர்காவற்துறை பல நோ. கூ. சங்கம், காரைநகர் பல நோ. கூ. சங்கம், வேலணை ஊர்காவற்றுறை தெ. ப. பொ. கூ. சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவர்கள், பொதுச்சபை பிரதிநிதிகள் பணிப்பாளர்கள், பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு புதிய வரலாறு படைத்திட பொங்கும் அலையென திரண்டு வாருங்கள் உரும்பராய் சந்தியிலுள்ள அன்னைபூபதியின் அரங்கிற்கு முன்பாக அனைவரையும் ஒன்றுசேருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்
தீவககோட்ட கூட்டுறவு ஒன்றியம்
(சி-9314)

# பேச்சுமூலமே பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும்

## ஆரியரட்ணா தெற்கில் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

இவ்வாறு இலங்கை சர்வோதயத்தின் தலைவர் ஆரியரட்ணா தென்பகுதியில் பிரசாரம் செய்துவருகின்றார்.

மகியங்கனை, காலி, மாத்தறை, நுவரெலியா ஆகிய இடங்களில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட கூட்டங்களில் சர்வோதயத் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**45-ம் நாள் நினைவஞ்சலியும்**
**அந்தியேட்டி அழைப்பிதழும்**



**துரையப்பா வைரவநாதன்**


மலர்வு: 20.02.1957
உதிர்வு: 18-03-1994

எம் அன்புச் செல்வமே! எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டு நீ எங்கே சென்றுவிட்டாய். உன் துயர் செய்தி கேட்டு துடி துடித்தான் உன் தம்பி உனையிழந்த தாயோ கதறுகிறாள் கண் கலங்கி உன் இழப்புக்கண்ட ஊராரோ உறக்கமின்றி தவிர்க்கின்றார்கள். உன் ஆத்மா சாந்தியடைய சுன்னாகம் சிவபூதராயரை அநுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் துயருறும்
அம்மா, தம்பி குடும்பம்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

சுன்னாகம் தெற்கு. (8173)

**6-ம் மாத**
**கண்ணீர் அஞ்சலி**



**5-ம் ஆண்டு**
**நினைவஞ்சலி**



**நினைவு கூருகின்றோம்...**





## கப்டன் மயூரன்

**(தியாகராஜா பாலசபாபதி)**

**மகனாக** 01-11-1970 **மாவீரனாக** 11-11-1993

பூநகரி நாகதேவன் துறையினிலே நாயகனாய்
சரித்திரம் படைத்துவிட்ட
எம்மினிய மயூரனே!
மின்னும் வேளையிலே மின்னாமல் முழங்காமல்
மண்ணில் மறைந்துவிட்ட
எம்மினிய சபாவே!
பொன்னுடலைக் கூட கண்ணில் காணாமல்
பொழுதெல்லாம் காத்திருந்தோம்;
போரிலே வென்று நீ
மீட்சியுடன் வருவாயென

## கப்டன் மொறிஸ்

**(தியாகராஜா பரதராஜன்)**

**மகனாக** 12-09-1969 **மாவீரனாக** 01-05-1989

தேடினோம் உன்னை;
படமாக வந்து நீ
புன்முறுவல் பூத்தாய்
பார்புகழும் மொறிஸான
உன் அண்ணன் இடந்தேடி
நீ சென்ற சேதியை
நாமறிந்த வேளையிலே
ஊரெல்லாம் அதிரும்படி
ஓலமிட்டழுதோமே....!
நீ ஏன் வரவில்லை?.?..

02-05-94 (நாளை) எமது இல்லத்தில் நடைபெறும் மாவீரர் நினைவுகூரல் நிகழ்வில் உற்றார், உறவினர், சகபோராளிகள், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு மதியபோசனம் அருந்தி சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சுந்தரி வாசா, ஆத்தியடி, பருத்தித்துறை. — குடும்பத்தினர் (8172)

## நினைவு கூருகின்றோம்...
## 01.05.1994

1988 ம் ஆண்டு இதே தினத்தில் மன்னார்-முழங்காவில், நாச்சிக்குடாப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப் கைசன்** (கபிரியேல் அந்தோனிப்பிள்ளை - தாமரைக்குளம்-மன்னார்)

1989-ம் ஆண்டு வவுனியாவில் இந்தியப்படையினரின் சிறை உடைப்பின்போது வீரச்சாவெய்திய,

**பெனா** (தில்லையம்பலம் தியாகராசா - கள்ளியடி, இலுப்பைக்கடவை மன்னார்)

இதே சம்பவத்தில் வீரச்சாவெய்திய நாட்டுப்பற்றாளர்கள்,

(செல்லப்பா பாலேந்திரன்-இராசேந்திரன்குளம்-வவுனியா)

(கந்தையா கணேசலிங்கம்-அனந்தர்புளியங்குளம்-வவுனியா)

(சிறிவையாமுரி செல்வம்-இடதுகரை, முத்தையன்கட்டு முல்லைத்தீவு)

யாழ்-பருத்தித்துறை, ஆத்தியடிப்பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

(பருத்தித்துறை பிரதேசப் பொறுப்பாளர்)

**கப்டன் மொறிஸ்** (தியாகராசா பரதராசன் - ''சுந்தரிவாசா'' ஆத்தியடி-யாழ்)

**லெப் ரம்போ** (தணிகாசலம் ஜெகநேசன்-பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை-யாழ்)

இதே இடத்தில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**வெள்ளை-சிறி** (வடிவேலு சிறிதரன் - விநாயகர் முதலியார் ஒழுங்கை - பருத்தித்துறை)

1991-ம் ஆண்டு மகிழூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**பாலகுமார்** (குணரத்தினம் கிரிதரன்-பெரியகல்லாறு-மட்டு)

மட்டு-பெரியபுல்லுமலை, அரந்தலாவை 19-ம் கட்டை, உன்னிச்சை ஆகிய நான்கு முகாம்களிலிருந்து வெளியேறியஇராணுவம் அப்பகுதியை சுற்றிவளைத்து மேற்கொண்ட நடவடிக்கையின்போது 35-ம் கிராமத்தைச் சேர்ந்த தந்தை, மகன் உட்பட கொலைசெய்யப்பட்ட 06 தமிழ்மக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9311)

# மே 1

மே தினம் - மேலான தினம் - மேதினியிற் தொழிலாளர் மேன்மையுற்ற தினம் - கொத்தடிமை நிலைக்கு கொள்ளியிட்ட தினம் - குபேரர்கள் ஆதிக்கம் குடை சாய்ந்த தினம் - இரத்தத்தில் ஒளியேற்றி இருள் ஒழித்த தினம்
இத்தினத்தில் உலகத் தொழிலாளர் ஒன்றுபட உழைக்கும் வர்க்கம் உயர்வு பெற எமது நல்லாசிகள்

உழைப்பதால் ஈழம்

லுமாலா ஏசியா ஹீரோ றலி

இறக்குமதித் தரத்துடன் உங்கள் சவாரிக்கு




- மிதிவண்டிகள் ஆண், பெண் இருபாலாருக்கும்.
- தரம்மிக்க மிதிவண்டி உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப் வகைகள்.

நம்பிக்கையுடன் வெற்றுக்கொள்ள

உழைப்பவன் வாழ்வு

மலரட்டும்



# இ.சுப்பிரமணியம்

• மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாக விற்பனை நிலையம்.

இல. 8. காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்

• மிதிவண்டி காட்சி அகம்.

இல. 6. காங்கேசன் துறைவீதி, சுன்னாகம்

குறிப்பு: எமது மிதிவண்டி காட்சி அகம் இரவு 7-30 மணி வரை திறந்திருக்கும்.

ஒளிரட்டும்

சளைத்தது இல்லை இத்தமிழினம் - தொடர்ந்து சமரிடும் இலக்கினை அடைந்திடும். உழைப்பவர் கைகளும் இணைந்திடும் - ஈழம் உதித்திட உலகமே வியந்திடும்.

(சி-9300)

அடுத்த மே தினத்துள் அது நிகழ்ந்திட எமது வாழ்த்துக்கள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சிவகுரு பொன்னம்பலம்
(Retired Railway Guard)

அன்னை மடியில்: 27 05 1925

இறைவனடியில்; 01-05-1993

குடும்பத்தின் ஒளி விளக்கே பண்பின் இருப்பிடமே
பாசத்தின் உறைவிடமே அன்பாய் வளர்த்து விட்டு
அதிவிரைவாய் சென்றதேனோ? வாழ வழிகாட்டி
எம்மை வையகத்தில் இருத்திவிட்டு
விண்ணகம் நோக்கி -நீங்கள்
விரைந்தது ஏன் ஐயா!
அஞ்சாத நெஞ்சுடனும் அன்புமொழியுடனும்
மங்காப் புகழுடனும் மகிழ்ந்திருந்த தாங்கள்
எல்லாம் மறைந்ததே ஓராண்டாய் - ஐயா!
ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு அகலாது

தங்களின் ஆத்மா சாந்தியடைய முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

''ராணிபவன்''
கம்பர்மலை
வல்வெட்டித்துறை
(8170)

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

## 31-வது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
## சபிண்டீகரண கிரியை அழைப்பிதழும்



தோற்றம் :
12-10-1935

## கேள்வி அறிவித்தல்

### கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்

யாழ் பிரதேச கல்வித்திணைக்களத்திற்குத் தேவையான தளபாடங்கள் வழங்கலும் விநியோகித்தலும்

யாழ் கல்வித்திணைக்களத்திற்கும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கோட்டக்கல்வி அலுவலகங்கள் பாடசாலைகள் ஆகியவற்றிற்கும் தேவையான கீழ்க் காணப்படும் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்கும் முத்திரையிடப்பட்ட கேள்விகள் தளபாட விநியோகஸ்தர்களிடமிருந்து 1994.06.03 திகதி காலை 10.00 மணிவரை யாழ் கல்வித்திணைக்கள கேள்விச்சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்விகள் இத்திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட கேள்விப்படிவத்தில் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் கேள்வி முடிவு நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் 'அலுவலகத் தளபாடங்கள் வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான கேள்விகள்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்வி முடிவு நேரத்திற்குப் பின்னர் கேள்விகள் திறக்கப்படும் அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

03. கேள்விப்படிவங்கள். நிபந்தனைகள், மாதிரிப் படங்கள் ஆகியவற்றை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 250/-, மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 250/- ஆக மொத்தம் ரூபா 500/- ஐ இவ்வலுவலகத்தில் செலுத்திப் பெற்று உரிய பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து 1994.05.31ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் எமது திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

### தேவையான தளபாடங்கள்

1. அலுவலக மேசை (பெரியது)
2. அலுவலக மேசை (சிறியது)
3. கைப்பிடிக் கதிரை
4. உருக்கு அலுமாரி
5. மாநாட்டறை மேசை (பெரியது)
6. மாநாட்டறை மேசை (சிறியது)
7. உருக்கு கோவை தாங்கி
8. கடதாசி கனதி
9. அலுவலக மரத்தட்டு (றே)
10. சாதாரண கதிரை
11. சாதாரண மேசை
12. வாங்கு
13. அறிவித்தல் பலகை
14. கரும்பலகை தாங்கியுடன்
15. நூலகக் கதிரை
16. நூலக அலுமாரி (கண்ணாடி முகப்புப்பொருத்தப்பட்டது
17. ஆய்வுகூட இருக்கை
18. மாணவர் உருக்கு மேசை
19. மாணவர் உருக்குக் கதிரை
20 பாலர் உருக்குக் கதிரை
21 பாலர் உருக்கு மேசை
22 ஸ்கிரீன் பெரியது)
23. ஸ்கிரீன் (சிறியது)

கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1994. 04 29

(சி-9301)

## சந்திரிகாவுக்கு அதிகபாதுகாப்பு

(கொழும்பு)

மேல் மாகாணசபை முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவிற்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தென் மாகாண சபைத் தேர்தலை அடுத்து அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனக் கருதி இப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

## காயமடைந்தவர் மரணம்

[வடமராட்சி]

குடத்தனை பொற்பதியில் நடைபெற்ற கோஷ்டி மோதலில் படுகாயமடைந்த அ. ஞானமணி மரணமடைந்துள்ளார்.

படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் இருந்து அவசர சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர் வியாழன் இரவு அங்கு மரணமானார்

[யோ]

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
### ஈராண்டுப் பகுதி நேரப் பட்டப்பின் கல்வித் தகைமை கற்கைநெறி 1993/94

## புதிய அனுமதி

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் நிரந்தர பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1994-05-27 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறி தொடர்ப்பான விண்ணப்பங்களை பெற விரும்புவோர் நிதிக் கிளையில் ரூபா 10/-செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

### புலமைப் பரிசில் பரீட்சை
## சித்தியடையும் மாணவர்கள் ஜன. அனுமதி பெறுவர்

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு ஒவ்வொரு வருட ஜனவரி மாதமே முன்னணி பாடசாலைகளில் சேர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு கல்வி அமைச்சு வழங்கும் என அறிவிக்கப்படுகிறது,

இதுவரை காலமும் முன்னணி பாடசாலையில் அனுமதிபெற மூன்றரை மாதங்கள் வரை காத்திருக்க வேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது,

## ஆசிரிய சங்கங்களை சந்திரிகா சந்திப்பார்

(நல்லூர்)

தென் மாகாண சபை முதலமைச்சர் சந்திரிக்கா குமாரணதுங்கா ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார். இந்தச் சந்திப்பு மிகவிரைவில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

அனைத்து ஆசிரியர் சங்கங்களுக்கும் இது குறித்து முதலமைச்சரின் செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார். இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கும் அழைப்புகிடைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

## அடைவு மீளல் நடவடிக்கை யூன் 6 வரை நீடிப்பு
### - மக்கள் வங்கி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் கொழும்பு மருதானையில் இயங்கும் அடைவு மீளல் பகுதியின் நடவடிக்கைகள் யூன் மாதம் 6ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அடைவு நகைகளை இதுவரை மீட்காதவர்கள் அவற்றை மீட்பதற்கு ஒழுங்கு செய்யுமாறும், நேரடியாக கொழும்பு செல்ல முடியாதவர்கள் தங்களின் முகவர் மூலம் அடைவு நகைகளை மீட்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும் என்றும் மேற்படி வங்கியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### தென்னிந்திய திருச்சபை
### யாழ் ஆதீனம், சாவகச்சேரி
## தொழிற்பயிற்சி நிலையம்

மேற்படி தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி, தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகிய நெறிகளில் பயிற்சி பெற விரும்புவோர் உங்கள் விண்ணப்பப் பத்திரங்களை காலை 9-00 மணி முதல் மதியம் 12-00 மணி வரை பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

"குரு இல்லம்"
தென்னிந்திய திருச்சபை,
சாவகச்சேரி

விண்ணப்ப முடிவுத் திகதி 10-05-1994

குறிப்பு;- கடைசியாக முடிவடைந்த பயிற்சிநெறியில் பங்குபற்றி சான்றிதழ்களை பெறாதவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் உங்களது



மறைவு:

01.04.1994

## திரு. முத்துச்சாமி இராசரத்தினம்

(செயலாளர், வலி கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி)

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் கடமையின் இருப்பிடமாய்
தந்தைக்கு எடுத்துக்காட்டாய் இருந்து
திடீரென எம்மை ஆறாத்துயரில் மூழ்கவைத்து
மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்பு
தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கிறோம்.

மரணச்சடங்கில் நேரில் பங்குபற்றியும், அனுதாபங்களைத் தெரிவித்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது குடும்பத்தலைவரின் சபிண்டீகரண கிரியை நாளை 02-05-1994-ந் திகதி திங்கட்கிழமை மு. ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அதில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்துகொள்வதுடன் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

''சாந்தினி வாசா'' — மனைவி, பிள்ளைகள்,
சிறுப்பிட்டி மத்தி, — மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
நீர்வேலி. — உறவினர்.

(8158)

---

யாழ்ப்பாணம்.
1994. 04 29 (சி-9301)

---

## அந்தியேஷ்டி அழைப்பிதழ்
01.05.1994



தோற்றம்:
01.03.1927

மறைவு:
01-04-1994

## அமரர் திருமதி பாலசிங்கம் செல்லம்மா

(நவற்கிரி ஆச்சி)

அன்னாரின் அந்தியேஷ்டிக்கிரியை 01-05-94 ஞாயிறு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
திரு. திருமதி இராசதுரை
குடும்பத்தினர்

(8142)

---

உதவிப் பதிவாளரிடம் சமர்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வுநாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1994-07-24 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

தெரிவு செய்யப்படுவோர் 25 மைல் சுற்றடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும்பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைசமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1994-05-27ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

(சி-9291)

---

குறிப்பு:- கடைசியாக முடிவடைந்த பயிற்சிநெறியில் பங்குபற்றி சான்றிதழ்களை பெறாதவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் உங்களது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

செயற் திட்டப் பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை

ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி-9271)

---

### தென்னிந்திய திருச்சபை - யாழ் ஆதீனம்

## நம்பிக்கை இல்லம்
## (*HOUSE OF HOPE*)

மேற்படி இல்லத்திற்கு உடல் ஊனமுற்ற, வலது குறைந்த (Physically disabled) ஐந்து (5) வயதிற்கும் பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் குடும்ப விபரத்துடன் திருமதி P. கதிர்காமர் அவர்களை இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுண்ணாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

**செயற்திட்ட பணிப்பாளர்,**
**தென்னிந்திய திருச்சபை**

ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி-9272)

---

JAFFNA MUNICIPAL COUNCIL

# மே 1

**தொழிலாளர் திரு நாளாகிய மே 1 இல் உழைக்கும் மக்களாகிய நாம் ஒன்று திரண்டு எமது கரங்களைப் பலப் படுத்துவோம்.**

## யாழ் மாநகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கம்

(8165)

சிந்தனைக்கு

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு.
— பாரதிதாசன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் | 01-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

# ஒடுக்குமுறைக்கெதிரான எழுச்சிநாள்!

இன்று உலகத் தொழிலாளர் தினமாகும்

அடிமைப்பட்டுக் கிடந்த தொழிலாளர்கள் சுமார் ஒரு நூற்றாண்டுகளுக்கு மேலாகப் போராடி 1886ஆம் ஆண்டு இதே நாளில்தான் தமது அடிப்படை உரிமைகளை வென்றெடுத்தார்கள். இவ் உரிமையை நிலைநாட்டிக் கொள்ள அமெரிக்கத் தொழிலாளர் பல தியாகங்களையும், துன்ப, துயரங்களையும் அனுபவிக்க வேண்டியிருந்தது.

இப்போராட்டம் ஒடுக்கப்பட்ட தொழிலாளர் உரிமைகள் கோரி நடத்தப்பட்டமையினால் இது தொழிலாளர் போராட்டம் என வழங்கி வரினும், உண்மையில் இதுவும் ஒருவகையில்அடக்குமுறைக்கெதிரான போராட்டமே. இப்போராட்டத்தில், ஆண் பெண் வேறுபாடோ அன்றி வயது வேறுபாடு இன்றியே மக்கள் கலந்து கொண்டமையே இப்போராட்டம் அடக்குமுறைக்கு எதிராக மக்களின் போராட்டம் என்பதை வலியுறுத்தப் போதுமானதாகும். அதாவது, தொழிலாளர்கள் தமது மேலாதிக்க சக்திகளிடம் இருந்து தமது உரிமையைப் போராடி பெற்றுக் கொண்டனர்.

இந்தவகையில், தமிழ்மக்களைப் பொறுத்து 'மே தினம்' என்பது ஒடுக்குமுறைக்கு எதிரான ஓர் எழுச்சி நாளே. ஏனெனில் தமிழ் இனம் வர்க்க வேறுபாடோ அன்றி பால், வயது வேறுபாடோ இன்றி சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகியுள்ளனர். இவ் ஒடுக்குமுறையானது தமிழ் மக்களை நோக்கி பல்வேறு வடிவங்களில், முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது

இதேசமயம் சிங்களப் பேரினவாத அரசிடம் தமிழ்த் தொழிலாளர்கள் தமது உரிமைக்காகப் போராடும் நிலையில் [illegible] அவர்களுக்கு இன்று தொழிலேஇல்லை. [illegible] தொழில்கள்யாவும் சிறிலங்கா அரசாங்கத்தினால் அழிக்கப்பட்டு விட்டன. இந் நிலையில்தனது தொழில் செய்யும் உரிமைக்காகப் போராடவேண்டிய நிலையில் தமிழ்மக்கள் உள்ளார்களே

# புதிய சிந்தனை காரணமாக எதிர்க்கட்சிக்கு வாக்களிப்பு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நாட்டுக்கு தேவையானது புதிய சிந்தனைகளே புதிய சிந்தனைகள் மூலமே நாட்டின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும் என சிறிலங்கா பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நாட்டின் வாக்களிப்பவர்களில் சுமார் எழுபத்திநான்கு லட்சம் பேர் இளைஞர்கள் எனவே இவர்கள் புதிய சிந்தனைகளை விரும்புகின்றார்கள். அவர்களின் சிந்தனைக்கு ஏற்றவற்றை ஆராய்ந்து அதன்படி நடக்க வேண்டும். இன்று பெரும்பாலானவர்கள் எதிர்க் கட்சியை ஆதரிக்க இது தான் காரணம் என தெரிவித்த அவர் இதனை அறிந்து அதற்கு ஏற்ற கொள்கையில் மாற்றம் செய்யப்படும் என தெரிவித்தார்.

# மக்கள் கூடுவதை தடுக்கவே அரசின் பாதுகாப்பு எச்சரிப்புகள்

## பொது ஜன ஐக்கிய முன்னணி

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பு குறித்து அவதானம் செலுத்துமாறு பாதுகாப்பு அமைச்சு விடுத்த வேண்டுகோள் மே தினத்தில் கொழும்பு நகரில் மக்கள் ஒன்று கூடுவதை தடுக்கும் நோக்குடன் விடுக்கப்பட்டது என பொது ஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மே தினத்தில் பல லட்சக் கணக்கான மக்கள் கொழும்பில் ஒன்று கூட இருப்பதாகவும் இது தமது கூட்டணியில் மக்களின் நம்பிக்கை வலுப்படுத்தும் என்பதை உணர்ந்து அரசாங்கம் இவ்வாறான எச்சரிக்கையை பாதுகாப்பு அமைச்சின் ஊடாக விடுத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

எனவே இவ் வேண்டுகோளை தொடர்ந்து மக்கள் மேதினஊர்வலத்திற்கும்கூட்டங்களுக்கும் வருவது வெகுவாக குறையும் என தாம் நம்புவதாக தெரிவித்துள்ளார்.

# ஹேமா பிரேமதாசாவை கூரே சந்தித்துப் பேச்சு நடத்தினார்

(கொழும்பு)

மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாசாவுக்கும், கட்சி பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன கூரேக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

என்ன விடயம் தொடர்பாக இச் சந்திப்பில் பேசப்பட்டது என்று தெரியவில்லை. டி. பி. விஜேதுங்கா ஹேமா பிரேமதாசா சந்திப்பின் பின்னர் இச் சந்திப்பு நடைபெற்றதாகவும் அநேகமாக ஓராண்டு நினைவு தின வைபவங்களில் கலந்து கொள்வது தொடர்பாக ஆராயப் பட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் மேலும் தெரிய வருகின்றது.

# அதிக களை கொல்லி பாவனை; மரக்கறி உணவு பாதிப்பு

சுத்தமான புதிய மரக்கறிகளைத் தேடிவாங்குபவர்கள் தமக்குப் புற்றுநோயை உண்டாக்கக் கூடிய களைகொல்லிகளுக்கும் பணம் செலுத்துகிறார்கள் என்று விவசாய ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

புழுக்களின் தாக்கங்களைத் தடுப்பதற்காக விவசாயிகள் தேவைக்கதிகமாகக் களை கொல்லியைப் பாவிக்கிறார்கள் என்று பேராதனைப்பல் கலைக்கழக விவசாய பீட ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

# பதிவுஇல்லாத அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது தடை?

இலங்கையில் செயல்படும் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களும் புனர்வாழ்வு-புனரமைப்பு அமைச்சில் பதிவு செய்யவேண்டும்

அரசாங்கம் புதிதாக இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. பதிவு செய்ய தயங்கும் அல்லது பதிவு செய்யாமல் செயல்படும் அரச சார்பற்ற நிறுவன

கத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும் புதிய அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐம்பது ஆயிரத்திற்கு மேற்பட்ட பணத்தை செலவழிக்கும் நிறுவனங்களின் கணக்கு விபரங்களை அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட எவரும் கேட்பதற்கு உரிமை உண்டு எனவும் அறிவிக்கப்பட்டுள்

# சங்கானை நூலகத்திற்கு நூல்கள் அன்பளிப்பு

வலிமேற்கு பிரதேச சபையின் சங்கானை உப அலுவலக பொது நூலகத்திற்கு பெறுமதி வாய்ந்த பல புத்தகங்கள் அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றுள்ளன.

இந் நூல்களை தென்இந்திய திருச்சபையாழ் பேராயர்கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் மேற்படி பொது நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (41)

# உற்பத்தி எழுச்சி வார போட்டி முடிவுகள்

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வருடம் தோறும் உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகளை நடாத்தி வருகின்றது. இவ்வகையில் வட்ட ரீதியாகவும் கோட்ட ரீதியாகவும் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு துறை சார்ந்த போட்டியாளர்களுக்கான யாழ் மாவட்ட ரீதியிலான போட்டி 24-04-94 லிருந்து 27.04 94 வரை இடம் பெற்றது. இப் போட்டி முடிவுகள் பின்வருமாறு.

**மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி**

ஏ. பிரிவு

01 ம் இடம் இராமநாதர் சிவானந்தம் புன்னாலைக் கட்டுவன்

02 ம் இடம் சின்னராசா கருணா சண்டிலிப்பாய்வடக்கு

03-ம் இடம் அந்தோனிப்பிள்ளை நவரட்ணராஜா உரும்பராய் வடக்கு

பி. பிரிவு

01-ம் இடம் செல்லத்துரை திருநாவுக்கரசு கட்டுவன் தெல்லிப்பளை

02-ம் இடம் மார்க்கண்டு துரைசிங்கம் பிரான் பற்று, பண்டத்தரிப்பு

03 ம் இடம் கணபதிப்பிள்ளை சிவஞானம் அளவெட்டி வடக்கு, அளவெட்டி

சி. பிரிவு

01-ம் இடம் கந்தையா வரதராசா வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை

02-ம் இடம் கந்தையா செல்வரட்ணம் சுதுமலை வடக்கு, மானிப்பாய்

03-ம் இடம் சிவசுப்பிரமணியம் சிறீதரன் அராலி மேற்கு, வட்டுக்கோட்டை

# வதிவிட வேளாண்மை போட்டி முடிவுகள்

யாழ்மாவட்டத்தில் அமைந்துள்ள வதிவிடங்களில் உள்ள நிலம், நீர் போன்ற இயற்கை வளங்களை சரியாக பயன்படுத்தி உச்ச பயன்பாட்டை பெற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வருடா வருடம் வதிவிட வேளாண்மை போட்டியை நடாத்தி வருகின்றது.

இப்போட்டியை நடாத்துவதன் மூலம் ஒவ்வொரு வதிவிடங்களிலும் நிலப்பயன்பாடு அதிகரிப்பது நாட்டின் உற்பத்தியையும் பொருளாதாரமும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வகையில் 93/94-ம் ஆண்டு நடாத்தப்பட்ட 3-வது வதிவிட வேளாண்மைப் போட்டியில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றோர் விபரம் பின்வருமாறு,

01-ம் இடம் வைத்திலிங்கம் பரராசசிங்கம் கச்சாய் 02-ம் இடம் கெங்காதரம் சந்திரசேகரம் பேக்கரி ஒழுங்கை சண்டிலிப்பாய் 03-ம் இடம் நடராசா துஷ்யந்தன் விதானையார் வளவு, நெல்லியடி பொன்னம்பலம் யோகநாதன் பொற்பதி வீதி, கொக்குவில்

# உற்பத்திசார் போட்டி முடிவுகள்

**பனைமரம் ஏறுதல் போட்டி**

1ஆம் இடம் தில்லையம்பலம் அருமைத்துரை உடுவில் வட்டம், ஈவினை.

2ஆம் இடம் சின்னவன் விஜயகாந்தன் சங்கானை, சுழிபுரம் மத்தி.

3ஆம் இடம் சிறீஜெயச்சந்திரன் ஜெகதீஸ்வரன் கொடிகாமம்

**தோட்டம் கொத்துதல் போட்டி**

3ஆம் இடம் கணேசன் தங்கநாயகம் அல்வாய் வடக்கு

**கிடுகு பின்னுதல் போட்டி**

1ஆம் இடம் மாணிக்கம் வள்ளிப்பிள்ளை தவசிகுளம், கொடிகாமம்

2ஆம் இடம் சி. தெய்வானை சாம்சன் குடியிருப்பு அரியாலை

3ஆம் இடம் து. சந்திரமதி

02-ம் இடம் நல்லதம்பி கனகதுரை சாவற்கட்டு சி. க. ச. அமைப்பு

03 ம் இடம் பிரான்சிஸ் சேவியர் மெலிஞ்சிமுனை சி. க. ச. அமைப்பு

**நீச்சல்போட்டி - பெண்கள்**

01-ம் இடம் குமாரசாமி வசந்தி வரணி இடைக்குறிச்சி

02 ம் இடம் குமாரசாமி சுமதி வரணி இடைக்குறிச்சி

தொழிலாளர்கள் தமது உரிமைக்காகப் போராடும் நிலையில் [illegible] வர்களுக்கு இன்று தொழிலேஇல்லை. [illegible] தொழில்கள்யாவும் சிறிலங்கா அரசாங்கத்தினால் அழிக்கப்பட்டு விட்டன. இந்நிலையில்தனது தொழில் செய்யும் உரிமைக்காகப் போராடவேண்டிய நிலையில் தமிழ்மக்கள் உள்ளார்களே ஒழிய தொழிலாளர் உரிமை பற்றி பேசக் கூடிய நிலையில் அம்மக்கள் இல்லை.

மின்சாரம், எரிபொருள் தடை மற்றும், பொருள்கள் மீது அரசு விதித்துள்ள தடையானது, தமிழர் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகளை முற்றாகவே முடக்கி விட்டன. இதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமது தொழில் இழந்து வருமானம் இழந்து பெரும் அல்லலுற்று வருகின்றனர். அத்தோடு இராணுவ நடவடிக்கையினால் இத்தொழிலாளர்கள் வீடுகளை விட்டு விரட்டப்பட்டு அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

அத்தோடு, கடற்தடைச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ள அரசாங்கம் மீனவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றது. இத்தாக்குதல்கள் பல அப்பாவித் தொழிலாளர்களின் உயிரைப் பலி கொண்டுள்ளதோடு, எஞ்சியுள்ள அவர்களின் தொழில் உபகரணங்களையும் இழந்து அவர்களை நிர்க்கதியான நிலைக்குத் தள்ளியுள்ளது. அவர்கள் தொழிலற்று பெரும் துயர் உறவேண்டியுள்ளது.

இதேசமயம் சிறிலங்கா அரசாங்கத்தின் இனவெறிக் கொள்கையால், தொழிலாளர்கள் அற்ற ஏனைய வர்க்கத்தினர் கூட தமது நடவடிக்கைகளை ஆபத்தின்றி சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. பொருளாதாரச் சுமை அவர்களைத் திக்குமுக்காட வைக்கின்றது. வர்க்க வேறுபாடு இன்றி சிங்களப் பேரினவாதத்திற்குத் தமிழ்மக்கள் தலைவணங்க வேண்டும் என்பதே ஆட்சியாளர்களின் திட்டமாகும்.

இந்தவகையில் தமிழ்மக்களுக்குத் தொழிலாளர் உரிமை என்பதும் தமிழீழத்திற்கான விடுதலைப்போராட்டம்என்பதும் சமாந்தரமானவையாகவே உள்ளன. இந்நிலையில் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் வெற்றி பெறும்பட்சத்திலேயே தொழிலாளர்களின் போராட்டமும் வெற்றி பெற முடியும். ஆகையினால், தமிழ் மக்களின் மேதின எழுச்சி என்பது உரிமைப் போராட்டத்திற்கான எழுச்சியாகவே இருக்க வேண்டும். அப்பொழுதே தமிழ்மக்கள் ஒட்டுமொத்த ஒடுக்குமுறையில் இருந்து விடுபட முடியும்;

---

புனரமைப்பு அமைச்சில் பதிவு செய்யவேண்டும்

அரசாங்கம் புதிதாக இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. பதிவு செய்ய தயங்கும் அல்லது பதிவு செய்யாமல் செயல்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தடை செய்யப்படலாம் என அரசாங்கம் மறைமுக அறிவிப்பை விடுத்துள்ளது.

இதே சமயம், ஐம்பது ஆயிரத்திற்கு அதிகமான நிதியைக் கையாளும் அரச சார்பற்ற பொது நிறுவனங்களை அரசாங்கம் கண்காணிக்கும் என்றும் இவ்வாறு நிதியைக் கையாளும் மேற்படி நிறுவனங்கள் நிதியை எதற்கு செலவழிக்கின்றன என்பதைஅரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

ஐம்பது ஆயிரத்திற்கு மேற்பட்ட பணத்தை செலவழிக்கும் நிறுவனங்களின் கணக்கு விபரங்களை அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட எவரும் கேட்பதற்கு உரிமை உண்டு எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் செயல்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பட்டை கட்டுப்படுத்தவே இப்புதிய அறிவிப்பு என்றும் இதன் மூலம் பொது நிறுவனங்கள் வடக்கு-கிழக்கில் நிதியை கையாள்வதற்கு அரசு மறைமுகமாக தடை விதித்திருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## சர்வோதயம் - அரசு உறவு சுமுக நிலைக்கு திரும்பியது

(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தை விட தற்போது சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இலங்கை சர்வோதய கிளைக்குமிடையில் நல்லுறவு நிலவி வருகிறது. அரசாங்கத்திற்கு சர்வோதயத்திடமிருந்த பகை உணர்வு டி. பி. விஜேதுங்காவின் ஆட்சியில் நீங்கிவிட்டது.

இவ்வாறு சர்வோதயத்திற்கான வடக்கு, கிழக்கு பிரதம நிறைவேற்று முதல்வர் திரு எஸ் வி சங்கரப்பிள்ளை நேற்று மாலை எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடும் போது,

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா சர்வோதய நிறுவனத்திற்கு பெரும் இடையூறாக இருந்து வந்தார். சர்வோதயத்தின் நிர்வாக செயற்பாட்டிற்கும் வேலைத் திட்டங்களுக்கும் பிரேமதாசா பெரிதும் இடையூறு விளைவித்து வந்தார்.

சர்வோதயம் நாடெங்கும் பரந்துபட்ட அளவில் வளர்ச்சி கண்டிருப்பதை பிரேமதாசா விரும்பவில்லை. இந்த நிறுவனத்தை தடை செய்ய முயன்றார்.

இவற்றிற்கு காரணம் சர்வோதயம் அரசியல் மயமாக்கப்படலாம் என்று அவர் கருதியதே சர்வோதயமோ அதன் தலைவர் ஆரியரட்னாவோ அரசியலை விரும்பவில்லை.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் ஆட்சியில் சர்வோதயத்திற்கு எதுவித தொல்லைகளும் அரச தரப்பினரால் ஏற்படுவதில்லை.

சுயமாக சர்வோதயம் செயற்படுவதற்கு அரசாங்கம் உதவுகிறது.

பிரேமதாசாவின் காலத்தில் உலக நாடுகளிடமிருந்து சர்வவோதயத்திற்கு கிடைக்கப் பெறும் உதவிகளுக்கு அரசாங்கத்தால் இடையூறு விளைவிக்கப்பட்டு வந்தது.

இன்று அந்த நிலைமையில்லை. இலங்கை திறைசேரி செயலாளர் திரு. பாஸ்கரலிங்கத்தால், உலக நாடுகளிலிருந்து சர்வோதயத்தின் இலங்கைக் கிளைக்கு கிடைக்கும் உதவிகளுக்கு அங்கீகாரமும் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வழமை போன்றே சர்வோதயத்தின் வேலைத்திட்டங்கள் வடக்கு • கிழக்கில் செயற்படுத்தப்படுகின்றன என்றார். (தி)

---

வட்டம், ஈவினை.

2ஆம் இடம் சின்னவன் விஜயகாந்தன் சங்கானை, சுழிபுரம் மத்தி.

3ஆம் இடம் சிறீஜெயச்சந்திரன் ஜெகதீஸ்வரன் கொடிகாமம்

**தோட்டம் கொத்துதல் போட்டி - ஆண்கள்**

1ஆம் இடம் இ. நாகராசா சண்டிலிப்பாய்

2ஆம் இடம் பண்டாரி குணசேகரம் உடுவில், சங்குவேலி

3ஆம் இடம் மாணிக்கம் வில்வராசா சங்கானை மேற்கு

**தோட்டம் கொத்துதல் போட்டி - பெண்கள்**

1ஆம் இடம் குமாரசாமி வசந்தி இடைக்குறிச்சி, வரணி

2ஆம் இடம் சுந்தரம் கோமளசோதி கரம்பைக்குறிச்சி, வரணி

3ஆம் இடம் கந்தையா தேவகுமாரி கரம்பைக்குறிச்சி, வரணி

**துலாப்பட்டை மூலம் நீரிறைத்தல் - ஆண்கள்**

1ஆம் இடம் முருகன் சிவஞானம், ஆழ்வான் பாலசிங்கம் மத்தொனி

2ஆம் இடம் ப. சங்கரன், க. தவராசா கைதடி கிழக்கு

3ஆம் இடம் பத்மநாதன் தெய்வேந்திரம், தாமோதரம் இராகவன் கரவெட்டிகிழக்கு

**துலாப்பட்டை மூலம் நீரிறைத்தல் - பெண்கள்**

1ஆம்இடம் வேலுப்பிள்ளை நாகேஸ்வரி, கந்தையா தேவகுமாரி கரம்பைக்குறிச்சி மேற்கு

2ஆம் இடம் குமாரசாமி சுமதி, குமாரசாமி வசந்தி இடைக்குறிச்சி, வரணி

3ஆம் இடம் கந்தசாமி தர்மஜெகதீஸ்வரி, சுந்தரம் கோமளசோதி கரம்பைக்குறிச்சி மேற்கு

**குட்டான் இழைத்தல் போட்டி**

1ஆம் இடம் கந்தசாமி செல்வநாயகம் கரம்பைக்குறிச்சி, வரணி

2ஆம் இடம் அ. சூரியகலா கரணவாய்

**கிடுகு பின்னுதல் போட்டி.**

1ஆம் இடம் மாணிக்கம் வள்ளிப்பிள்ளை தவசிகுளம், கொடிகாமம்

2ஆம் இடம் சி. தெய்வானை சாம்சன் குடியிருப்பு அரியாலை

3ஆம் இடம் து. சந்திரமதி பெரியபளை, பளை

**விளக்குமாறு தயாரித்தல் போட்டி**

1ஆம் இடம் இராசா இராசேஸ்வரன் இடைக்குறிச்சி

2ஆம் இடம் கந்தசாமி செல்வநாயகம் கரம்பைக்குறிச்சி

3ஆம் இடம் தங்கவேலு செல்வரூபன் இமையாணன் மேற்கு

**கயிறு புனைதல் போட்டி**

1ஆம் இடம் நாகராசா புஸ்பராணி, தருமலிங்கம் ஸ்ரீமதி, சீனிவாசகம் தெய்வநாயகி கச்சாய் தெற்கு

2ஆம் இடம் புஸ்பலதா கந்தசாமி, தயா கந்தசாமி அ. யோகேஸ்வரி சாம்சன் குடியிருப்பு

3ஆம் இடம் சண்முகம் சுமதி, சண்முகம் இராகினி. சின்னக்குட்டி தவமணிதேவி கச்சாய் தெற்கு

**உணவுப்பண்டம் தயாரித்தல்**

1ஆம் இடம் திருமதி ப. சரசமீனா ஸ்ரீபன் குடியிருப்பு புகையிரத நிலைய முகாம்

2ஆம் இடம் உமா அருளானந்தம் வடமராட்சி பருத்தித்துறை

3ஆம் இடம் பிரான்சிஸ் அமலோற்பமேரி முஸ்லிம் பகுதி

**கடல் வளச் சார் போட்டி முடிவுகள்**

**தோணி தாங்குதல் போட்டி**

01-ம் இடம் கு. லபீந்திரன் உருண்டி சி க ச அமைப்பு

02-ம் இடம் மு. அழகேஸ்வரன் சாவற்காடு சி. க ச. அமைப்பு

03-ம் இடம் வே கணேசன் ஊரி சி. க. ச அமைப்பு

**நீச்சல்போட்டி - ஆண்கள்**

01-ம் இடம் நல்லதம்பி கனகேந்திரம் சாவற்கட்டு சி. க. ச. அமைப்பு

03 ம் இடம் பிரான்சிஸ் சேவியர் மெலிஞ்சிமுனை சி. க ச. அமைப்பு

**நீச்சல்போட்டி - பெண்கள்**

01-ம் இடம் குமாரசாமி வசந்தி வரணி இடைக்குறிச்சி

02 ம் இடம் குமாரசாமி சுமதி வரணி இடைக்குறிச்சி

03-ம் இடம் சுந்தரம் கோமளசோதி வரணி கரம்பைக் குறிச்சி

**பாய்மரம் ஓட்டுதல்போட்டி**

01-ம் இடம் யாக்கோப்பு சீரணி மெலிஞ்சிமுனை சி. க. ச. அமைப்பு

02-ம் இடம் இம்மனுவல் பிரான்சிஸ் சேவியர் மெலிஞ்சிமுனை சி. க. ச. அமைப்பு

03-ம் இடம் த. கந்தசாமி சாவற்கட்டு சி. க. ச. அமைப்பு

**கட்டுமரம் துடுப்பெடுத்தல் போட்டி**

01-ம் இடம் தம்பு முகுந்தன் அம்பாள் க ச. சங்கம்

02-ம்இடம் வேலுப்பிள்ளை கிருஸ்ணசாமி அம்பாள் க. ச சங்கம்

03-ம் இடம் குணரட்ணம் லபீந்திரன் உருண்டு சி, க. ச. அமைப்பு

**வலை பின்னுதல் போட்டி**

01-ம் இடம் தம்பிமுத்து வடிவேலு அம்பாள் சி. க. ச. அமைப்பு

02-ம் இடம் தங்கராசா நகுலேஸ்வரி அம்பாள் சி. க. ச. அமைப்பு

03-ம் இடம் கணபதி மாசிலாமணி சின்னமடு சி க. ச. அமைப்பு

**கயிறு இணைத்தல்போட்டி**

01-ம் இடம் தம்பிமுத்து வடிவேலு அம்பாள் சி. க. ச. அமைப்பு

02-ம் இடம் தங்கராசா நகுலேஸ்வரி அம்பாள் சி க. ச. அமைப்பு

03-ம் இடம் கணபதி மாசிலாமணி சின்னமடு சி. க. ச. அமைப்பு

---

### இன்று தேர்

இணுவில் - கோண்டாவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் ரதோற்சவம் இன்று காலை9மணிக்குநடைபெறும். (21)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ் மாவட்டம்

## மேதின ஊர்வலம்

**நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்குமான அறிவித்தல்**

மேதின ஊர்வலம் ஞாயிற்றுக்கிழமை அதாவது இன்று (1-5-94) பிற்பகல் 2-00 மணிக்கு மருதனார் மடம் சந்தியிலிருந்து ஆரம்பமாக இருப்பதால், அனைத்து தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் தவறாது நண்பகல் 12-00 மணிக்கு மருதனார்மடம் சந்தியில் ஒன்றுகூடி மேதின ஊர்வலத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் பங்குபற்றி ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றேன்.

பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்
(கி-9321)


# புலிகளின் நடமாட்டம் இருக்கையில் கரையோரப் படை அவசியம்

**கருணாநிதி கூறுகிறார்**

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருக்கும் இன்றைய சூழ்நிலையில் கடலோர காவற்படை முகாம்கள் இருப்பது தற்போது மிகவும் தேவையானது என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் மத்திய அரசு கடலோர காவல் கடமையில் ஈடுபட்டிருக்கும் கடற்படையை மீளப் பெறக் கூடாது எனவும், தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மாநில அரசு தேவையான வசதிகளை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

# 2 கட்ட உணவு முத்திரை ஒரே தடவையில் வரும்

இடம் பெயர்ந்தவர்களுக்கான இலவச உலர் உணவு முத்திரைகளின் இரண்டுகட்ட முத்திரைகளும் இம்முறை ஒன்றாக எடுத்து வரப்படவுள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை நோக்கி அடுத்து வருகின்ற கப்பலில் இவ் உலர்உணவுமுத்திரைகள் எடுத்து வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் முதற்கட்ட உலர் உணவு முத்திரையானது மார்ச், ஏப்ரல், மே, ஆகிய மாதங்களுக்கானதும் இரண்டாம் கட்ட உலர் உணவு முத்திரையானது யூன், யூலை, ஒகஸ்ட் ஆகிய மாதங்களுக்கானதுமே எடுத்துவரப்படவுள்ள உலர் உணவு முத்திரைகளாகும் என தெரிவிக்கப்பட்டது. [பா]

## 4 அதிகாரிகள் காயம்

[கொழும்பு]

வவுனியாவில் வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் குறைந்தது நான்கு இராணுவ அதிகாரிகள் கடுமையாகக் காயப்பட்டனர்

# வேலூர் முகாமிலிருந்து 4 புலிகள் தப்ப முயற்சி

வடஆற்காடு வேலூரில் உள்ள உயர் பாதுகாப்பு சிறைப்பகுதியிலிருந்து நான்கு விடுதலைப் புலிகள் தப்பிச் செல்ல முயன்றனர் எனவும் இது தமிழ்நாடு காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நால்வரும் தாங்கள் காவலில் வைக்கப்பட்டிருந்த இடத்தில் 5அடி ஆழத்துக்குப் பள்ளம் தோண்டி அதன் மூலம் தப்பிச்செல்ல மேற்கொண்ட முயற்சியை அதிகாரிகள் கண்டுபிடித்ததாக தமிழ்நாடு காவல் துறையினர் தெரிவித்தனர்.

## மாட்டுவண்டி சவாரி

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் 7-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சவாரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# பார்வையாளர் மீது விளையாட்டுவீரர் தாக்கு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தில் கபாடி விளையாட்டு வீரர்கள் ஐவர் பார்வையாளர் ஒருவரை பலமாக நையப்புடைத்ததில் காலில் காயம் ஏற்பட்ட ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் கடந்த வியாழன் மாலை நடந்தது. இது பற்றி மேலும் தெரியவருகையில் கபடி விளையாடிக் கொண்டிருந்த இரண்டு அணிகளில் ஒரு அணிக்கு இவர் ஆதரவு வழங்கிக் கொண்டிருந்ததினால் இவர் தாக்கப்பட்டார் என தெரிய வருகிறது.

மாதகலைச் சேர்ந்த பிரான்சீஸ் ஜேசுதாஸ் என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவராவார்.

## பரீட்சை பிற்போடப்பட்டது

[கொழும்பு]

பல மாவட்டங்களில் நிலவும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப தகுதியான ஆசிரியர்களை தெரிவு செய்வதற்காக கடந்தமாதம் நடைபெறவிருந்த போட்டிப் பரீட்சை இம் மாதம் இறுதியளவில் நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்

நாடெங்கிலும் உள்ள மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அண்மையில் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் அதற்காக நடைபெறவிருந்த பரீட்சைகள் கல்விச் சேவை சபையின் வேண்டுகோளின் பேரில் பின்போடப்பட்டுள்ளன

## மேதினம்

வலிகாமம் கோட்டம், யாழ். நல்லூர் கடற்புலிகள் அணி, வடமராட்சி கோட்ட அணி, தென்மராட்சி கோட்ட அணி, தீவகக் கோட்ட அணி, கோப்பாய் வட்ட அணி, உடுவில் தெல்லிப்பளை வட்ட அணி, சங்கானை-சண்டிலிப்பாய் வட்ட அணி ஆகியவை பின் தொடர்ந்து செல்ல ஏற்பாடாகியுள்ளது.

பல ஊர்திகள் பவனியும் மக்கள் அணியுடன் இணைந்து செல்லவுள்ளன.

யாழ். குடாநாடெங்கும் மேதினத்தை அறிவிக்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ் நகரம், மற்றும் புறநகரம், கிராமங்கள் எங்கும் மேதினத்தை ஒட்டி எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.

கோட்ட வட்டரீதியாக வரும் அணிகளும் ஊர்திகளும் அதற்கான ஒதுக்கப்பட்ட இடங்களில் ஒன்று சேரும். பின்னர் மருதனார் மடம் சந்தியில் ஆரம்பிக்கும்பேரணியில் அவை இணைந்து கொள்ளும்.

வடமராட்சி கோட்டம் (கடற் புலிகள் பிரதேசம்

## அடிப்படை

யாகக் குரல் கொடுத்தாலே உரிமைகளை வென்றெடுக்கலாம்.

எனவே கல்வித்திணைக்கள ஊழியர்களாகிய நாம் இந்த மேதின பேரணியில் பங்கு கொள்ள அணிதிரள்வோம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (பா)

## அரசாங்கத்தின்

க்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அப்போது குண்டு வெடிப்பு இடம்பெற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் பணிப்பின் பேரிலேயே அருள்தாஸ் குண்டுகளை வெடிக்கச் செய்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது-

அத்துடன் இதுவரை பொலிசாரால் அறியப்படாத நான்கு

## சாம்பியன்களாக தெரிவு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் நாகர் கோவில் வெண்மதி விளையாட்டுக் கழகமும், உதைபந்தாட்டப் போட்டியில் மணற்காடு சென் அன்ர

வெலிக்கடை படுகொலை

# கொல்லப்பட்டோருக்கு நட்டஈடு வழங்க உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடைச் சிறையில் 1983 ஜூலையில் கொல்லப்பட்ட தமிழ்ப் போராளிகளின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கும்படி கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது

இதில் மூவரின் குடும்பங்களுக்கு தலா எழுபத்தையாயிரம்ரூபா வீதமும், ஏழு பேரின் குடும்பங்களுக்கு ஐம்பத்தையாயிரம் ரூபா வீதமும் இருபத்தியொரு பேரின் குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதமும் வழங்கப்பட வேண்டுமென்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# தென்பகுதி கொலைகள் விரிவான அறிக்கை தேவை

(கொழும்பு)

தென் இலங்கையில் நடைபெறும் அரசியல் கொலைகள் குறித்து விரிவான அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என கண்டியில் செயல்படும் உலக பௌத்த அமைப்பு ஒன்று ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

கடந்த காலக் கொலைகள் ஜே. வி. பி. யினரால் செய்யப்பட்டவை என கூறப்படுகின்றது. ஆயினும் தொடர்ந்து அரசியல் கொலைகள் இடம் பெறுகின்றன.

சமீபத்தில் மாத்தளை மாநகர சபை உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான கொலைகள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்
மே 1 அனைத்துலக

## தொழிலாளர் தினம் பேரணி

எமது எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களையும் 94-05-01 ஞாயிற்றுக்கிழமை (இன்று) நண்பகல் 11 மணிக்கு எமது காரியாலயத்திற்கு முன்பாக அணிதிரளுமாறு பணிவாக கேட்டுக் கொள்கின்றோம்

எமது எழுச்சியை உலகிற்கு காட்டவும் எமது உரிமைகளை வென்றெடுக்கவும் அனைத்து வர்த்தகர்களும் தவறாது இந்தப்பேரணியில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம்

(சி- 9319)


## மே தினம்

புறப்படும் புலிப்படை போர்க்குரல் கேட்குது
மறக்குலத் தமிழனின் உடலெல்லாம் சிலிர்க்குது
பசித்திருக்க போராட ஒன்றிணைவோம் - இனி
உயிர்த்திருக்க போராட ஒன்றிணைவோம்.

உழைக்கும் கரங்கள் இவை - புது
உலகினை படைக்கும் கரங்கள் இவை
நிலத்தில் உழுபவன் நிலத்தில் வாடுகிறான்
நிலத்தை ஆள்பவன் நித்தம் கொழுக்கிறான்

கலப்பை பிடிக்கும் எங்கள் கைகள்
காவியம் படைத்தது இந்த நாளில்
எம் தேசியத் தலைவரின் வழிகாட்டலில்
நாம் உரிமைகளுக்காக ஒன்று திரள்வோம்.

- தமிழ்ஈழ போக்குவரத்து

தேசிய பட்டியலில் எம். பிகள்

# ராஜினாமா கடிதங்களை டி. பி. கோரவுள்ளார்

தேசியப் பட்டியல் மூலம் தெரிவான ஐக்கிய தேசிய கட்சி எம். பிக்கள் ஒவ்வொருவரிடமும் ராஜினாமா கடிதத்தைபெறுவதற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா திட்டமிட்டுள்ளார் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன

இக் கட்சியின் செயற்குழு கூட்டம் எதிர்வரும் மூன்றாம் திகதி நடைபெறும் போது மேற்படி தெரிவான ஒவ்வொரு எம் பிக்களையும் தனித்தனியாகச் சந்தித்து இந்த ராஜினாமாக் கடிதத்தை பெற திட்டமிட்டுள்ளார் என மேலும் தெரிய வருகின்றது.

## கட்சி

பிரச்சினை ஏற்பட்டாலும் அவற்றை கட்சி மட்டத்திலே பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கவே நான் விரும்புகிறேன் கட்சிக்கு என்ன தேவை என்

[illegible] தும் எனக்[illegible] குரோதம் ஒன்றும் இல்லை

ஆனால் நான் கட்சி மீது கொண்ட பற்றினால் நான் இதைக்கூட பெரிதாகக் கருதவில்லை அன்று நான் கூறும்

எம் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் நாம் உரிமைகளுக்காக ஒன்று திரள்வோம்.

- தமிழ்ஈழ போக்குவரத்து
ஊழியர் சங்கம்
மருத்தித்துறை சாலை

(சி- 9323)

## வலி. கிழக்கு வர்த்தகர் சங்கம்
## அனைவரும் அணிதிரள்வீர்

இன்று 1-5-94 ஞாயிற்றுக்கிழமை மேதினப் பேரணியிற் கலந்து கொள்வதற்காக நண்பகல் 12 மணிக்கு கோப்பாய் சந்தியில் மேற்படி சங்க எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களையும் அணிதிரளும்படி அழைக்கின்றோம்.

செயலாளர்

(8175)

# எடிசன் அக்கடமி

[யாழ். இந்து அருகில்]
411/1, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

[கொக்குவில் இந்து அருகில்)
27, கே. கே எஸ். வீதி
கொக்குவில்,

## எமது இரு நிறுவனத்திலும்
## O/L DAY CLASS
## புதிய பிரிவு
## ஆரம்பம்: 03-05-94 செவ்வாய் 8 மணி

- யாழ். பிரபல ஆசிரியர் குழு
- கணிதம் வாரத்தில் 6 மணி நேர வகுப்பு.
- கணிதம் அடிப்படையில் இருந்து போதிப்பதுடன் 18 வருட வினாக்களும் மீட்கப்படும்,

[சி-9322]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மே மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நாகர் கோவில் வெண்மதி விளையாட்டுக் கழகமும், உதைபந்தாட்டப் போட்டியில் மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் வலைப் பந்தாட்டப் போட்டியில் தாளையடி சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் எல்லே விளையாட்டுப் போட்டியில் மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகமும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994- 5- 01 ஞாயிறு இரவு

08. 01- உலகதொழிலாளர் தின நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''மேதினம்''
08. 15 - தாயகப்பாடல்கள்
08 30 - செய்திகள்
08. 40- தொடர்ந்து தாயகப் பாடல்கள்

1994- 5- 02 திங்கள் காலை

07 . 02 - மாவீர வணக்கம்
07. 15 - மணியோசை
07 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்

**யாழ். ஸ்ரீதரில்...**
தினசரி மாலை 4, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10.30
மாலை 4, 6 மணி

**காற்றுவெளி**
சனி, ஞாயிறு 2.30 மணிக்கு
**ஒளிவீச்சு**
(சி-9290 )

தார் எனவும் தெரிவிக்கப்பட்டது-

அத்துடன் இதுவரை பொலிசாரால் அறியப்படாத நான்கு பேரின் பெயர்விபரங்களையும் வேறு பல தகவல்களையும் மதிவண்ணன் பொலிசாருக்கு வழங்கியிருப்பதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் உருவச் சிலையை ஜனாதிபதி டி பி விஜேதுங்கா, செயலாளர் கே. எச் ஜே. விஜேதாசா சகிதம் சென்று நேற்றுப் பிற்பகலில் பார்வையிட்டார். இவ் உருவச்சிலை இன்று திறந்து வைக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆளு...

டத்தில் வைத்தே தனது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்க இருந்ததாகவும் ஆனால் ஜனாதிபதி டி பி. விஜேதுங்காவின் வற்புறுத்தலின் பேரிலேயே இன்று பதவிவிலகவுள்ளதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதே சமயம் தற்பொழுது கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் அமைச்சர் கூரேயின் இரு வீடுகளும் விலைபேசப்பட்டு வருவதாகவும் அவர் விரைவில் நாட்டைவிட்டு வெளியேறுவார் என்றும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

யில் அவை இணைந்து கொள்ளும்.

வடமராட்சி கோட்டம் (கடற் புலிகள் பிரதேசம் உட்பட) - சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவிலடி. தென்மராட்சி கோட்டம் - உரும்பராய் ஞானவைரவர் கோவிலடி, தீவகக் கோட்டம் - சுன்னாகம் அன்னை பூபதி கலையரங்கம் அருகில், கோப்பாய் வட்டம் - உரும்பராய் சிவகுமாரன் நினைவுச் சிலையடி அருகில், உடுவில், தெல்லிப்பழை வட்டங்கள் - சுன்னாகம் சந்தியிலிருந்து காங்கேசன் துறைப் பக்கம், சங்கானை, சண்டிலிப்பாய் வட்டங்கள் (கடற்புலிகள் பிரதேசம் உட்பட) கந்தரோடை வீதி, யாழ் நல்லூர்க் கோட்டங்கள் (கடற்புலிகள் பிரதேசம் உட்பட) உடுவில் மகளிர் கல்லூரி அருகில் கோட்ட மற்றும் வட்ட ரீதியாக மக்களும் ஊர்திகளும் ஒன்று சேரும்.

இப்பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும் கூட்டுறவுச் சங்கச் சமாச ஊழியர்கள், மற்றும் அரசாங்க, திணைக்கள ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரியர்சங்கங்கள், பாடசாலை மாணவர்கள், வேறு தனியார் நிறுவன ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று நடைபெறும் இந்த மேதினப் பேரணியும் பொதுக் கூட்டமும் எழுச்சியுடன் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (தி)

## அறிவித்தல்

சுதுமலை, ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலய திருவிழாக்காலக் கடைகள் வழங்குதல் எதிர்வரும் 3.5.1994 (செவ்வாய்க்கிழமை) மாலை 3 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

(8177 - நிர்வாகம்

அவற்றை கட்சி மட்டத்திலே பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கவே நான் விரும்புகிறேன் கட்சிக்கு என்ன தேவை என்பதை தீர்மானிக்க வேண்டியது கட்சியின் தலைமைப்பீடத்தில் உள்ளவர்களின் கடமை என்றார்

சிலர் என்னை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து ஓரம் கட்டவும் இப் பதவியை கைப்பற்ற முயற்சிக்கின்றார்கள் இதனை சிலர் சதித்திட்டம் என்று கூறுகின்றார்கள் ஆனால் நான் இதனை பதவி ஆசை என்றே கூறுவேன் என்றார். என்ன காரணத்திற்காக இவ்வாறு செய்கின்றார்கள் என தெரியவில்லை என்றார்.

ஜனாதிபதியின் மனதுக்குள் என்ன இருக்கின்றது என என்னால் கூற முடியாது ஆனால் அவர் நினைத்து செயற்படும் காரணங்களில் எந்த விதஉண்மையும் இல்லை நான்தான் ஜனாதிபதிக்கு எம்மிடம் இருந்து பிரிந்தவர்களை மீண்டும் எமது கட்சியில் சேர்க்குமாறு வேண்டுகோள் விடுத்தேன் இதனை இன்று கூறவில்லை இலங்கையில் ஏழுமாகாணசபைதேர்தல் முடிவடைந்தவுடன் இதனை கூறினேன்-

ஆனால் எந்தக் காரணத்தை மையமாக வைத்தோ அது நடைபெறவில்லை. அது என்னால் வந்த பிரச்சினை அல்ல. நானும் அமைச்சர் சொக்சியும், பிரதமர் இன்னும் பல அமைச்சர்களும் இதற்கு சாட்சி பகர்வார்கள் கட்சியின் பொதுச்செயலாளராக நான் செயல்படும் போது தன்பட்ட கருத்துக்களை மையமாகக் கொண்டு செயற்படவில்லை எனவும் குறிப்பிட்டார்

ஜனாதிபதிபிரேமதாசாவின் நண்பன் என்ற முறையிலும், மிக நெருங்கிப் பழகியவன் என்ற வகையிலும், பிரேமதாசாவின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத்தெரிவித்தார் என்ற நோக்கிலேயுமே இதனைத் தனிப்பட்ட முறையில் எதிர்த்தேன், அது தவிர காமினி

ஆனால் நான் கட்சி மீது கொண்ட பற்றினால் நான் இதைக்கூட பெரிதாகக் கருதவில்லை அன்று நான் கூறும் போது காமினியை எடுத்து இருந்தால் இன்று இந்நிலை தோன்றியிராது ஆனால் இன்று இந்த முடிவை நான் ஏன் மாற்றினேன் என்பதை தற்போது கூற விரும்பவில்லை என தெரிவித்தார்

அரசியலில் ஹேமா பிரேமதாசா வருவதற்கு விரும்பினால் அவர் அதனைவெளிப்படையாக தெரிவித்து கட்சியிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும், அது வேறு ஒரு பிரச்சினை நான் அவர் வருவதற்கு ஒரு தடையாக இருக்கவில்லை

நானும் பிரதமர் மற்றும் அமைச்சர் சொக்சி ஆகியோர் ஜனாதிபதி பிரேமதாசாவின் புதல்வர் சஜித் பிரேமதாசாவை அம்பாந்தோட்டை மவட்டத்தில் மாகாண சபையில் போட்டியிடுவதற்கு வழிகளை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தோம் சஜித்தும் அதற்கு விருப்பம் கொண்டிருந்தார்.

ஆனால் அம்பாந்தோட்டை மாவட்ட எமது கட்சி மாகாணசபை வேட்பாளர்கள் தற்போதைய ஜனாதிபதிக்கு தெரிவித்தனர் நாம் இங்கு போட்டியிட விரும்புகின்றோம் அவர் கொழும்பு மத்திய தொகுதிக்கு போட்டியிட தகுதியுடையவர் என தெரிவித்தனர் இதனை தொடர்ந்து நான் சஜித் பிரேமதாசாவை மத்திய கொழும்பு தொகுதிக்கு வருமாறு பத்திரிகை மூலம் அழைப்பு விடுத்தேன்

ஜனாதிபதி பிரேமதாசா மறைவைத்தொடர்ந்து அன்று ஊரடங்குச் சட்டம் யாரோ ஒருவரின் ஆலோசனைக்கு அமைய போடப்பட்டது அன்றே பிரேமதாசாவின் கொள்கைகளை மக்கள் மனதில் இருந்து எடுப்பதற்குபோடப்பட்டமுதல் சம்பவம் இது என கூறலாம் எனவும் தெரிவித்தார்.